**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 148-2020**

**PW-2**

**பெயர் :** சுப்பிரமணியன்

**த/பெ :** பச்சமுத்து

**தேதி :** 16.02.2024

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வட்டார வளர்ச்சி அலுவலக ஆய்வாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை பொது அதிகாரம் பெற்ற முகவர் தான் வாதிக்கு எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் முந்தைய உரிமையாளரை நான் இதுவரையில் பார்த்தது இல்லை என்றால் சரிதான். வாதி சைட் நம்பர் 12 ஐ தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்துடன் லேஅவுட் வரைபடம் ஒரு பகுதியாக உள்ளது என்றால் சரிதான். அதில் வடபுறம் கிழமேல் அடி 57.6 ஆக கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் சைட் நம்பர் 11க்கு தென்புறம் உள்ள கிழமேல் அடி 82.6 ஆக கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. அதில் கண்டுள்ள அளவுகளில் தான் சைட் நம்பர் 12ஐ வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சைட் நம்பர் 11ல் வாதிக்கு உரிமை எதுவும் இல்லை என்றால் சரிதான். சைட் நம்பர் 11ஐ 1ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு உட்பட்ட சைட் 11ன் எல்லைக்குள் தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும், எங்களுக்கு எந்தவிதத்திலும் இடையூறு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு முன்புறத்தில் தென்வடல் தடத்தில் வாதி ரேம்ப் போட்டுள்ளார் என்றால் சரிதான். வாதியின் வீட்டு ஓரமாக செடி, கொடிகள் வைத்துள்ளார் என்றால் அவரது இடத்தில் வைத்துள்ளார்.

3. வாதிதான் பொது வழி தடத்தில் இடையுறாக ரேம்ப் மற்றும் செடி கொடிகள் வைத்து இதர உரிமையாளர்களுக்கு இடையூறு செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இதனை 1ம் பிரதிவாதி கேட்டதின் பேரில் 1ம் பிரதிவாதியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தென்வடல் சாலையில் நாங்கள் ரேம்ப் போட்டுள்ளோம், அதேபோல் தான் மற்ற இணை சைட்டுகளின் உரிமையாளர்களும் ரேம்ப் போட்டுள்ளார்கள், ஆனால் 1ம் பிரதிவாதி மட்டும் வாதியின் வீட்டை மறைக்கும் அளவிற்கு கிழமேலாக ரேம்ப்பை இழுத்துள்ளார்.

4. வாதி வீட்டிற்கு வடபுறமாக 1ம் பிரதிவாதி முத்துலிங்கத்தின் வீடு மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 வரிசையில் உள்ள புகைப்படங்களில் உள்ள வீடு மற்றும் ரேம்ப் வாதியின் வீட்டுடையது என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் கண்டுள்ளது போல் பிரதிவாதி வாதிக்கு எந்த இடையூறும் செய்யவில்லை என்றாலும், பிரதிவாதியின் வீடானது அவரது எல்லைக்குள் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல, பிரதிவாதி அவரது இடத்திற்குள் தான் வீட்டைக் கட்டியுள்ளார். ஆனால் ரேம்ப் மட்டும் தான் வாதியின் வீட்டை மறைக்கும் அளவிற்கு உள்ளது. வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் பிரதிவாதி அவரது கட்டிடத்திற்கு முறையாக அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதி கூறியுள்ளது போல் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.02.16 19:52:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.